மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராம. இராமநாதன். வலங்கைமான் தொகுதியைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய பக்கத்துத்தொகுதி. வலங்கைமான் சட்டமன்றத் தொகுதி தனித்தொகுதி. எனவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்து இருக்கக் கூடிய அன்பு கலந்த என் நண்பர்கள் எல்லாம் தொழில் முனைவோர்களாக வந்தால் அந்தப் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக தொழில் துறையால் அறிவிக்கப்பட்ட தொகுதி. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்ற இடத்தில் தொழில் தொடங்குவதற்கு முனைந்து வருபவர்கள் இடத்தில் சொல்லி இந்த வலங்கைமான் பகுதியில் வந்து தொழில் துவங்குங்கள் என்று அறிவுரை செய்து அங்கே துவங்குவதற்கு ஆவன செய்வதற்கான நடவடிக்கை எடுப்பார்களா? அதைப் போல கும்பகோணம் பகுதியிலே அந்தப்பகுதி . . . . . (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கும்பகோணத்திற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர் அக்கறை எடுத்துக்கொண்டு தொழில் முனைவோர்களை வலங்கைமான் தொகுதியிலே தொழில் ஆரம்பிப்பதற்கு ஊக்குவித்து அவர்கள் முன்வருவார்களானால் அரசு கண்டிப்பாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 30, திரு. செ. பெருமாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 31, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்.

31—

சோதனைச் சாவடிகளில் வயர்லெஸ் வசதி ஏற்படுத்துதல்.

20143—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சோதனைச் சாவடிகளில் நிற்காமல் செல்லும் வாரிகளைப் பிடிக்க வயர்லெஸ் வசதி அனைத்து முக்கியப் பகுதிகளிலும் ஏற்படுத்தப்படுமா ?

[1994 மார்ச் 18

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு ஆண்டு காலமாக சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள முக்கிய சோதனைச் சாவடிகளிலும் கம்பி இல்லாத் தந்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஒரு ஆண்டு காலமாக சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கம்பி இல்லாத் தந்தி பொருத்தப்பட்டு இருப்பதாகக் கூறினார்கள். அதற்காக நான் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் சில சமயங்களில் சோதனைச் சாவடியில் லாரியை நிறுத்தி அந்த அதிகாரிகள் லாரியை சோதனைச் செய்ய முயற்சிக்கும் போது சில லாரிகள் அங்கே நிற்காமல் தப்பிச் சென்று விடுகின்றன. அப்படி தப்பிச் சென்று விடுவதன் காரணமாக அந்த லாரிகளில் என்ன பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றன, அந்தப் பொருட்கள் கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டு பிடிக்க முடியாமல் போய் விடுகின்றன. மேலும் ஒரு மாவட்ட எல்லையிலிருந்து அடுத்த மாவட்ட எல்லைக்கு அந்த லாரி கடந்து தப்பிச் செல்கின்ற நேரத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அந்த லாரிகளைப் பிடிக்க முடியாமல் அந்த மாவட்டத் தலைநகருக்குத் தெரிவித்து அதன் பிறகு அடுத்த மாவட்ட தலைநகருக்குத் தெரிவித்து அதன் பிறகு எங்கே லாரி செல்கிறதோ அந்த இடங்களுக்கு தகவல் தெரிவித்து இதன் மூலம் கால தாமதம் ஏற்பட்டு அந்த லாரி தப்பிச் செல்வதற்கு வழி ஏற்படுகிறது. இது போன்ற நிகழ்ச்சி ஏற்படாமல் இருக்க தமிழகத்தின் பிற பகுதிகளில் மிகவும் முக்கியமான சோதனைச் சாவடிகளில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அதாவது கம்பி இல்லாத்தந்திகள் அமைப்பதன் மூலம் நேரடியாகத் தொடர்பு கொண்டு அந்த தப்பிச் செல்கின்ற லாரிகளைப் பிடிப்பதற்கு வழி வகை செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லிய விவரங்களை இந்த அரசு ஏற்கனவே தெரிந்து வைத்து இருக்கின்ற காரணத்தால்நான் பரிட்சார்த்தமாக கடந்த ஆண்டு தமிழகத்தின் வணிக வரி சோதனைச் சாவடிகளில் கம்பி இல்லாத் தந்தி முறையை பயன்படுத்தி வரி ஏய்க்கின்ற விதத்தில் வாகன ஓட்டுநர்கள் செயல்படுவதை தடுத்து நிறுத்துவதற்கு கம்பி இல்லாத் தந்தி முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக கடந்த ஆண்டு நமது சென்னையைச் சுற்றியுள்ள மிகப்பெரிய